வழங்கியிருக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் அவர்களுக்கு, உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்களின் சார்பாகவும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப், ஒரே வரியிலே நன்றியை மாத்திரம் சொல்லுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களின் துயர் துடைக்க நான் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் வைத்த எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்று, மீனவ மக்களின் கண்ணீரைத் துடைத்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குக் குமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

3. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, குழுக்களின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS